117 உளமலி காதல் களவெனப் படுவது
ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப.

மனம் மகிழ்ந்து நெகிழ்வதற்குக் காரணமான களவு மணம் நான்கு வேதங்களில் சொல்லப்படும் எட்டு வகை மணங்களுள் யாழோடு இயங்கும் வானவர்களாகிய கந்தருவரின் முறையாகிய காந்தருவ மணத்தோடு ஒப்பிடத் தக்கது.

**களவு மணம் = காந்தருவ மணம்**

**நான்கு வேதம்**

1. ரிக் (rk)
2. யசுர் (yacur)
3. சாமணம் (sa:man)
4. அதர்வணம் (atharvana)

**வேதங்கள் கூறும் மணமுறை எட்டு**

1. பிரமம் (brahman)
2. பிரசாபத்தியம் (praja:patya)
3. ஆரிடம் (a:rsa)
4. தெய்வம் (daiva)
5. காந்தருவம் (ga:ndharva)
6. அசுரம் (asura)
7. இராக்கதம் (ra:ksasa)
8. பைசாசம் (paisaca)

**1. பிரமம் :** ஒத்த குலத்தில் (கோத்திரம்) உள்ளவன். நாற்பத்தெட்டு வயதுள்ள பிரமசரியனுக்குப் பன்னிரண்டு வயதுள்ள பெண்ணை முதல் பூப்பு அடைந்து இரண்டாம் பூப்பு அடைவதற்கு முன் அணிகலன்கள் அணிவித்துக் தானமாகக் கொடுப்பது.

**2. பிரசாபத்தியம்:** மகளைக் கொடுப்பதற்குரிய குலமாகப் பார்த்து மாப்பிள்ளை வீட்டார் கொடுக்கும் பரிச அளவை இரட்டிப்பாக்கிக் கொடுத்துப் பெண்ணைக் கொடுப்பது.

**3. ஆரிடம் :** ஒன்றானும் இரண்டானும் ஆவும் காளையும் வாங்கிக் கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீயைச் சாட்சியாக வைத்துக் கொடுப்பது.

**4. தெய்வம் :** பெருவேள்வி செய்கின்ற மரபைச் சார்ந்த பலருள் ஒருவருக்குக் கன்னியை அவ்வேள்வித் தீக்கு முன்னர் தட்சணையாகக் கொடுப்பது.

**5. காந்தருவம் :** கொடுப்பாரும் கேட்பாருமின்றித் தலைமகனும் தலைமகளும் தனியோர் இடத்து எதிர்ப்பட்டுத் தாமே கூடுவது.

**6. ஆசுரம் :** தலைமகளுக்கு அணிகலன்கள் பூட்டி, சுற்றத்தாருக்கும் பொன்னும் பொருளும் கொடுத்துக் கொள்வது.

**7. இராக்கதம்:** தலைமகளின் ஒப்புதல் இல்லாமலும் தமரின் ஒப்புதல் இல்லாமலும் வலிந்து அவளைக் கொண்டு செல்வது.

**8. பைசாசம்:** துயில்வோரிடமும் கள்ளுண்டு களித்து மயங்கியோரிடமும் சேர்வது.

(1)

## கைக்கிளையின் பாகுபாடு

118. **காட்சி ஐயம் துணிவுகுறிப்பு அறிவென**
**மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.**

அன்பின் ஐந்திணைக்குத் தொடக்கமாக அமையும் கைக்கிளை நான்கு வகைப்பாட்டை உடையது.

***1. காட்சி 2.ஐயம் 3.துணிவு 4. குறிப்பறிதல்***

(2)

**1. காட்சி**

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் நல்லூழின் பயனால் ஒருவரை ஒருவர் முதன் முதலாகக் காண்பது காட்சி எனப்படும்.

119. புணர்ப்பதும் பிரிப்பதும் ஆகிய பால்களுள்
புணர்க்கும் பாலில் பொருவிறந்து ஒத்த
கறைவேற் காளையும் கன்னியும் காண்ப
இறையோன் உயரினும் குறைவின்று என்மனார்.

முற்பிறப்பில் காம இன்பத்தில் ஈடுபட்டவர்கள் மறுபிறப்பில் அவர்கள் இணைவதும் பிரிவதும் அவர்களின் நல்வினை, தீவினையால் ஆகும். இப்பிறப்பில் நல்வினையின் பயனால் எதிர்ப்படுவர், குலம், செல்வம், அறிவு, போன்றவற்றாலும் பிறவற்றாலும் தம்முள் ஒத்தவர்களாக இருப்பார்கள். தலைமகன் தலைவியை விட உயர்வாக இருப்பினும் குற்றமில்லை என்பர்.

இக்கருத்துகளை முன்மொழிந்து, தலைவன் தலைவியை விட உயர்வாக இருப்பினும் குற்றம் ஆகாது என்பதைத் தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே**

*(தொல்.பொருள்.90)*

கரிய கண்கள் வண்டாகவும் செவ்வாய் தளிராகவும் அரும்பி வரும் இளம் கொங்கை கொத்தாகவும் மூங்கில் போன்ற பெரிய தோள்களை உடையவளைக் கண்டேன் என்னும் பொருளுடைய பின்வரும் பாடல் காட்சி என்னும் முதல் கைக்கிளைப் பகுப்பிற்குச் சான்றாகும்.

**மருட்பா**

**கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா**
**அரும்பிய மென்முலை கொத்தாகப் - பெரும் பணைத்தோள்**
**பெண்டகைப் பொலிந்த பூங்கொடி**
**கண்டேங் காண்டலுங் களித்த எம் கண்ணே**

(புறப்.வெண்.)

**2. ஐயம்** (3)

முதன் முதலாகத் தலைவியின் அழகைக் காணும் தலைவனுக்கு ஐயம் தோன்றும். இவள் மண்ணில் பிறந்த பெண்ணா அல்லது தெய்வ மகளா எனத் தோன்றும் வினாவே ஐயமாகும்.

120. மடமான் நோக்கி வடிவம் கண்ட
இடமும் சிறந்துழி எய்துவது ஐயம்.

மடமான் போன்ற விழியுடைய தலைவியைத் தலைவன் கண்ட இடமும் சிறப்புடையதாக அமையும்போது மண்மகளா? வான்மகளா? என்னும் **ஐயம்** எழுவது இயல்பு. இதனைச்

**சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப**
**இழிந்துழி இழிபே சுட்டலான** *(தொல்.பொருள்.91)*

எனத் தொல்காப்பியரும் ஐயம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

முன்னே தோன்றுகின்றவள் தெய்வமங்கையா? மயிலா? மானுடப் பெண்ணா? எனத் தலைவன் **ஐயம்** அடைவதை,

**அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலுமென் நெஞ்சு** *(திருக்.1081)*

என்னும் திருக்குறள்வழி அறியலாம். (4)

**3. துணிவு**

முதலில் கண்டு, ஐயுற்றுப்பிறகு இவள் மானுடப் பெண்ணே எனத்தெளிவு அடைவதே துணிவு எனப்படும்.

121. **எழுதிய வல்லியும் தொழில்புனை கலனும்**
**வாடிய மலரும் கூடிய வண்டும்**
**நடைபயில் அடியும் புடைபெயர் கண்ணும்**
**அச்சமும் பிறவும் அவள்பால் நிகழும்**
**கச்சமில் ஐயம் கடிவன வாகும்.**

அவளின் உடலில் வல்லிக் கொடி ஓவியம் தீட்டப்பட்டுள்ளது; வேலைப்பாடு அமைந்த அணிகலன்கள் அணியப்பட்டுள்ளன; சூடியுள்ள மலர்கள் வாடியுள்ளன. பூவை வண்டுகள் வட்டமிடுகின்றன; பூமியில் படும்படி அடிகள் நடை பயில்கின்றன. கண் இமைத்து எங்கும் பார்க்கின்றன. முகத்தில் அச்சம் தோன்றுகின்றது. மேலும் அவள் நிழல் அவளைத் தொடர்வதாலும் வியர்ப்பதாலும் மானுடப் பெண்ணே என்பதைத் தெளிய முடிகின்றது.

வியர்த்தல், மாலை வாடுதல், கால்கள் நிலத்தில் பதிதல், கண் இமைத்தல் போன்றவற்றைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

**திருநுதல் வேர்அரும்பும் தேன்கோதை வாடும்**
**இருநிலம் சேவடியும் தோயும் - அரிபரந்த**
**போகிதழ் உண்கணும் இமைக்கும்** (புறப்.வெண்)
**ஆகுமற்றிவள் அகலிடத்து அணங்கே** (5)

4. குறிப்பறிதல்

**தன்னைக் கண்டதால் தலைவி உள்ளத்தில் எழுந்துள்ள வேட்கையை அவளுடைய கண்களைக் கொண்டே தலைவன் தெரிந்து கொள்ளுதல்**

**(அக.விள.118)**

122. அரிவை நாட்டம் அகத்துநிகழ் வேட்கை
தெரிய உணர்த்துங் குரிசிற்கு என்ப.

தலைவியின் உள்ளத்தில் தோன்றும் விருப்பங்களை அவளுடைய கண்களே தலைவனுக்கு உணர்த்திவிடும். கண்கள் குறிப்பறிவித்தலைத் தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்**
**கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்**

**(தொல்.பொருள்.93)**

இராமன், சீதை இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு குறிப்பறிந்து நோக்கிக் கொண்டதைப் பின்வரும் கம்பராமாயணப் பாடலால் அறியலாம்.

**எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்**
**கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று**
**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்** **(கம்ப.597)**

**களவிற்கு உரிய கிளவித் தொகை** **(6)**

**இயற்கைப் புணர்ச்சி முதலாக வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும் களவு என்னும் கைகோளிற்குரிய கிளவிகள் ஆகும்.** இவற்றில் ஒவ்வொன்றும் சில உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. களவியல் தொடர்பான இலக்கணம் இப்பதினேழு பாகுபாட்டுடன் முடிவடைகிறது.

123. இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி உடன்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி இடையீடு
இரவுக் குறியே இரவுக்குறி இடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாதல்
ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயின் பிரிதலென்று ஒருபதின் ஏழும்
களவிற்கு உரிய கிளவித் தொகையே.

இந்நூற்பாவில் கூறப்படும் பதினேழும் களவிற்கு உரிய கிளவிகள் ஆகும்.

1. இயற்கைப் புணர்ச்சி
2. வன்புறை
3. தெளிவு
4. பிரிவுழி மகிழ்ச்சி
5. பிரிவுழிக் கலங்கல்
6. இடந்தலைப் பாடு
7. பாங்கியிற் கூட்டம்
8. பாங்கி மதி உடன்பாடு
9. பாங்கியற் கூட்டம்
10. பாங்கமை பகற்குறி
11. பகற்குறி இடையீடு
12. இரவுக் குறி
13. இரவுக்குறி இடையீடு
14. வரைவு வேட்கை
15. வரைவு கடாதல்
16. ஒருவழித் தணத்தல்
17. வரைவிடைவைத்துப் பொருள்வயின் பிரிவு

களவியல் கருத்துகள் அனைத்தும் இந்த பதினேழு பெரும் பிரிவில் அடங்கிவிடும்.

## 1. இயற்கைப் புணர்ச்சி

**முயற்சி இன்றி முடியும் தெய்வத்தான் இயன்ற இயற்கைப் புணர்ச்சி எனவும் தலைவனது முயற்சியான் முடியும் இயற்கைப் புணர்ச்சி எனவும் இயற்கைப் புணர்ச்சி இருவகைத்து.**

**(அக.விள.32.உரை)**

இயற்கைப் புணர்ச்சியை 124 முதல் 127 வரை உள்ள நூற்பாக்கள் விளக்குகின்றன.

(7)

### இயற்கைப் புணர்ச்சியின் தன்மை

124. தெய்வம் புணர்ப்பச் சிந்தைவேறு ஆகி
எய்தும் கிழத்தியை இறையோன் என்ப.

தன்மனம் எண்ணிப் பார்க்காத அல்லது மாறுபட்ட கருத்துக்கொண்ட தலைவன், தெய்வக் கூட்டத்தால் ஒரு தலைவியுடன் இணைவது இயற்கைப் புணர்ச்சியின் தன்மையாகும்.

(8)

**உயிர்ஒன்றி ஒருகாலைக்கு ஒருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணை**

என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவார்.

### தெய்வத்தின் எய்தும் புணர்ச்சியின் விரி

125. கலந்துழி மகிழ்தலும் நலம் பாராட்டலும்
ஏற்புற அணிதலும் என்னும்இம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.

தெய்வத்தின் நல்வினையால் இணைந்த தலைவனும் தலைவியும் இன்புற்று மகிழ்வர்.

1. தலைவனும் தலைவியும் மெய்தொட்டுப் புணர்ந்து மகிழ்ந்திருப்பார்கள்.
2. தலைவனும் தலைவியும் புணர்ந்து மகிழும்போது நலம்பாராட்டிக் கொள்வார்கள்
3. கலவியால் கலைந்து கிடக்கும் அணிகலன்களை ஒழுங்குபடுத்திக் கொள்வார்கள். (9)

## தலைவியால் எய்தும் புணர்ச்சியின் வகை

126. வேட்கை உணர்த்தல் மறுத்தல் உடன்படல்
கூட்டமென்று இறைவியின் கூட்டம்நால் வகைத்தே.

தலைமக்களுக்குள் இயற்கைப் புணர்ச்சி நிகழும்போது நான்கு வகையான படிநிலைகள் அமைந்திருக்கும்.

1. இயற்கைப் புணர்ச்சியின் போது தலைமகன் தன் ஆவலைத் தலைவியிடம் தெரிவிப்பான்
2. நாணம் முந்துறத் தலைவி முதலில் இணங்க மறுப்பாள்
3. பிறகு தலைவிக்கும் ஆவல் ஏற்பட; தலைவனோடு இணைய உடன்படுவாள்.
4. இறுதியாகத் தலைவனும் தலைவியும் இணைந்து மகிழ்வர்

(10)

## தலைவியால் எய்தும் புணர்ச்சியின் விரி

127. இரந்துபின் நிற்றற்கு எண்ணலும் இரந்து
பின்னிலை நிற்றலும் முன்னிலை ஆக்கலும்
மெய்தொட்டுப் பயிறலும் பொய்பா ராட்டலும்
இடம்பெற்றுத் தழாஅலும் வழிபாடு மறுத்தலும்
இடையூறு கிளத்தலும் நீடுநினைந்து இரங்கலும்
மறுத்துஎதிர் கோடலும் வறிதுநகை தோற்றலும்
முறுவற்குறிப்பு உணர்தலும் முயங்குதல் உறுத்தலும்
புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் பிறவும்
உணர்த்திய தலைவியின் புணர்ச்சியின் விரியே.

பின்வரும் பதினைந்தும் பிறவும் தலைமகளாப் புணரும் புணர்ச்சியின் விரியாகும்.

1. இரந்து பின்னிற்றலுக்கு எண்ணல்
2. இரந்து பின்னிலை நிற்றல்
3. முன்னிலை ஆக்கல்
4. மெய் தொட்டுப் பயிறல்
5. பொய் பாராட்டல்
6. இடம்பெற்றுத் தழாஅல்
7. வழிபாடு மறுத்தல்
8. இடையூறு கிளத்தல்
9. நீடு நினைந்து இரங்கல்
10. மறுத்து எதிர் கோடல்
11. வறிது நகை தோற்றல்
12. முறுவல் குறிப்பு உணர்தல்
13. முயங்குதல் உறுத்தல்
14. புணர்ச்சியின் மகிழ்தல்
15. புகழ்தல்

பிற

### 1. இரந்து பின்னிற்றலுக்கு எண்ணல்

தலைவன் தலைவியிடம் தன்னுடைய உள்ளக் கிடக்கையை எடுத்துக்கூறி, நின்னால் வந்தநோய் நின்னாலேயே தீரும் எனத் தாழ்ந்து இரக்கலாம் என நினைப்பது **இரந்து பின்னிற்றலுக்கு எண்ணல்** ஆகும்.

**மருந்தின் தீரா மண்ணின் ஆகாது**
**அருந்தவ முயற்சியின் அகற்றலும் அரிதே**
**தான்செய் நோய்க்குத் தான்மருந் தாகிய**
**தேனிமிர் நறவின் தேறல் போல**
**நீதர வந்த நிறையழி துயரம்**
**ஆடுகொடி மருங்குல் நின்னருளின் அல்லது**
**பிறதின் தீராது**

**(தொல். பொருள். 102, உரை மேற்கோள்)**

நீ தந்ததால் வந்த இந்நோய் மருந்தாலும் தீராது. தவந்தோர் முயற்சியாலும் நீங்காது. தேனால் வரும் நோய்க்குத் தேனே மருந்தாவது போல் நின்னால் வந்த நோய்க்கு நீயே மருந்தாவாய் என்பது பொருளாகும்.

### 2. இரந்து பின்னிலை நிற்றல்

தலைவன் தலைவியிடம் தன் குறையினைக் கூறித் தாழ்ந்து நிற்பது **இரந்து பின்னிலை நிற்றல்** என்பதாகும்.

**நெறிவேய் அலங்கல் முடித்தலை சாய்த்து இங்ஙன் நிற்பதுதான்**
**அறிவே அறிந்த உனக்கு அலர் மாளிகை ஆரணங்கே**

**(தஞ்.கோ.6)**

பெண்ணே! உன் கண்ணால் என்னை நோயுறச் செய்துவிட்டு நீ வாளா நிற்பது தகுமோ?

## 2. வன்புறை

தலைவன் தலைவியின் கூடலுக்குப் பின், தலைவி தலைவனுடைய இருப்பிடம், பண்பு முதலியன குறித்து ஐயுற்றபோது தலைவன் அவள் ஐயம் அகலும் வண்ணமாகத் தன்னைப் பற்றி வலிய அவளிடம் கூறுவது **வன்புறை** ஆகும். இனி வருவானோ? மாட்டானோ? என ஐயுற்ற தலைவிக்கு உறுதியாக வருவேன் எனக் கூறுவது.

### 1. வன்புறையின் வகை

128. **ஐயம் தீர்த்தல் பிரிவு அறிவுறுத்தல் என்று**
**எய்திய வன்புறை இருவகைத் தாகும்.**

1. **தன்னோடு கூடிப் பிரிந்தவன் திரும்பி வருவானோ மாட்டானோ எனத் தலைவி ஐயுற்ற போது அவள் ஐயம் போக்குவது**
2. **பிறகு தன்னுடைய பிரிவைப் பற்றித் தலைவியிடம் கூறுவது**

என வன்புறை இரு வகையில் அமையும். (12)

### வன்புறையின் விரி

129. அணிந்துழி நாணியது உணர்ந்துதெளி வித்தலும்
பெருநயப்பு உரைத்தலும் தெய்வத்திறம் பேசலும்
பிரியேன் என்றலும் பிரிந்துவருகு என்றலும்
இடமணித்து என்றலும் என்றிவை ஆறும்
மடனறத் தெரிந்த வன்புறை விரிவே.

வன்புறையின் விரியாகப் பின்வரும் ஆறு வகையான பாகுபாடுகள் காணப்படுகின்றன.

(ஐயம் தீர்த்தல்) (பிரிவு அறிவுறுத்தல்)

1. அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்
2. பெருநயப்பு உரைத்தல்
3. தெய்வத் திறம் பேசல்
4. பிரியேன் என்றல்
5. பிரிந்து வருகு என்றல்
6. இடம் அணித்து என்றல்

1. அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்

இருவரும் தழுவியபோது தலைவியின் அணிகலன்கள் தாறுமாறாகச் கலைந்து கிடந்தன. பாங்கியரும் பிறரும் கண்டால் ஐயங் கொள்வர் எனத் தலைவன் அவற்றை ஒழுங்குபடுத்துவது **அணிந்துவழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்** எனப்படும்.

**நாவியுங் காரகில் ஆவியும் தோய்குழல் நாணியஞ் சேல்**
**வாவியும் சோலையும் சூழ்தஞ்சை வாணன் தென்மாறை வயற்**
**காவியும் சேலும் கமலமும் காட்டுநின் கண்மலரும்**
**ஆவியும் போல் இனியார் அணியாக அணிந்தனனே**

(தஞ். கோ.20

தலைவியே! உன் அணிகலன்கள் கலைந்தன என்று கலங்காதே உன் பாங்கியர் அணிவித்தபடியே உனக்கு நானும் அணிவிக்கின்றேன்.

## 3. தெளிவு

தலைவனின் நற்பண்பு, அறிவு போன்றவற்றைத் தெளிவாக அறிந்து கொண்ட தலைவி பிரிந்து சென்றாலும் விரைவில் வந்து விடுவான் என எண்ணுவது தெளிவு ஆகும்.

**தெளிவு இன்ன தென்பது**

130. தலைவன் மாற்றம் தலைவி தேற்றம்
தெளிவாம் என்பர் தெளிந்திசி னோரே.

தலைவனின் சொல்லில் உண்மை இருப்பதை அறிந்து தலைவி தெளிவாக இருப்பாள் எனக் கூறுவர்.

**நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்**
**என்றும் என்றோள் பிரிவறி யலரே**
**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீரின்று அமையா உலகம் போலத்**
**தம்மின்று அமையா நம்நயந்து அருளி**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ செய்பு அறியலரே** *(நற்.1)*

(14)

தலைவன் தவறாத வாய்மை உடையவன்; இனியன்; தலைவியின் தோளைப் பிரிய விரும்பாதவன். அவனுடைய நட்பு தேனைப் போல உயர்ந்தது தண்ணீர் இல்லாமல் உலகமில்லை; அவனில்லாமல் நாமில்லை; நம்மைப் பிரியான்.

## 4. பிரிவுழி மகிழ்ச்சி

தலைவன் தலைவியைப் பிரிவதற்கு முன் காரணங்களைக் கூறித் தெளிய வைக்கின்றான். தெளிவடைந்த தலைவி தலைவனைப் பிரிந்து போகிறாள். அது கண்டு தலைவன் மகிழ்ச்சி அடைகிறான்.

**பிரிவுழி மகிழ்ச்சியின் விரி**

131. **செல்லும் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு**
**சொல்லலும் பாகனொடு சொல்லலும் இரண்டும்**
**பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.**

பிரிவுழி மகிழ்ச்சியின் விரி பின்வருமாறு இரண்டு வகையில் அமையும்.

**1.செல்லும் கிழத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல்**

தலைவி பிரிந்து செல்லும் போது தாங்கள் இருவரும் கூடி மகிழ்ந்த இடத்தை எண்ணித் தலைவன் தன் நெஞ்சோடு கூறுதல்,

**காணா மரபிற்று உயிரென மொழிவோர்**
**நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே**
**யாஅம் காண்டும்எம் அரும்பெறல் உயிரே**
**சொல்லும் ஆடும் மென்மெல இயலும்**
**கணைக் கால்நுணுகிய நுசுப்பின்**
**மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே**

**(தொல். பொருள். 10, மேற்கோள்)**

காணப்படாதது உயிரென்று கூறுவர். அதில் உண்மையில்லை. யான் என் உயிரைக் கண்டேன். அது கணைக்காலையும் நுண்ணிய இடையையும் கருங்கண்களையும் தோள்களையும் உடையது. அது மெல்லவும் செல்லவும் மெல்லவும் நடக்கும் யானைத் தலைவன் ஆயத்தோடு போகின்ற தலைவியைக் கண்டு கூறுகின்றான்.

**2. பாகனொடு சொல்லல்**

தலைவனைக் காண வந்த பாகனிடம் பிரிவுழி மகிழ்ச்சியோடு செல்லும் தலைவியைக் காட்டிக் கூறுதல்.

**மேல்வரும் ஏதம் அஞ்சி**
**முன்பார்த்து என்நெஞ்சம் வருவழி பார்த்து முறைமுறையே**
**பின்பார்த்து ஒதுங்குதல் காண்வலவா ஒருபெண்ணணங்கே**

**(தஞ். கோ. 28)**

பின்னால் வரக் கூடிய பழியஞ்சி, முன்னால் பார்த்தும் என் நெஞ்சம் அவளை நாடுவதை அறிந்து பின்பார்த்தும் தனியே நிற்பதைக் காண்பாயாக பாகனே!



## 5. பிரிவுழிக் கலங்கல்

தன்னுடைய பிரிவைச் சொன்னபோது காரணம் அறிந்து மகிழ்ச்சியுடன் தலைவி பிரிந்து செல்கிறாள். அவள் பிரிந்து செல்லும்போது பிரிவு தாங்காமல் தலைவன் கலங்குதல்.

**பிரிவுழிக் கலங்கலின் வகைகள்**

132. **மருளுற்று உரைத்தல் தெருளுற்று உரைத்தலென்று**
**இருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.**

தலைவி பிரிந்து சென்றபின் தலைவன் கலங்குவது இரண்டுவகையாகப் பின்வருமாறு அமையும்.

*1. மருளுற்று உரைத்தல்* *2.தெருளுற்று உரைத்தல்*

தோழியர் கூட்டத்தில் தலைவி சிறந்தவளாகவும் பெருமை மிக்கவளாகவும் இருப்பது பற்றித் தலைவன் கூறுவது **மருளுற்று உரைத்தல்;** பெருமையுடன் கூறுவது **தெருளுற்று உரைத்தல்.**

# 6. இடந்தலைப்பாடு

இடம்-தலைப்பாடு எனில் முன்பு புணர்ந்த இடத்தில் லைவியோடு கூடுதல் எனப் பொருள்படும்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் தலைவியை மறுநாள் வ்விடத்தில் சந்தித்தல்.

இவ்விடந் தலைப்பாடு இருவகைப்படும்.

1. **பாங்கன் வாயிலாகத் தலைவி இருக்கும் இடம் தெரிந்து அவ்விடத்தில் வந்து சந்தித்தல்.**

2. **பாங்கனிடம் கூறாமலே முதல் நாள் கூட்டுவித்த விதி மறுநாளும் கூட்டுவிக்கும் என்ற நம்பிக்கையில் தலைவன் தானே வந்து தலைவியைச் சந்தித்தல்.**

134. தெய்வம் தெளிதல் கூடல் விடுத்தலென்று
இவ்வோர் மூவகைத்து இடந்தலைப் பாடே.

**1. தந்த தெய்வம் தெளிதல்**

முன்பு தலைவியைக் கூட்டி வைத்த தெய்வம் பின்னும் சேர் வைக்கும் என நம்பி வருதல்.

**2. கூடல்**

முதல் நாள் தலைவியைக் கூடிய இடத்திற்கு வந்து தலைவ மீண்டும் கூடுதல்.

**3. விடுத்தல்**

தன்னோடு கூடிய தலைவியைத் தலைவன் பாங்கியர் கூட்டத்து போகவிடுத்தல்.

(18)

## இடந்தலைப் பாட்டின் விரி

135. **தந்த தெய்வம் தருமெனச் சேறலும்**
**முந்துறக் காண்டலும் முயங்கலும் புகழ்தலும்**
**உடன்புணர் ஆயத்து உய்த்தலும் எனஐந்து**
**இடந்தலைப் பாட்டின் இலக்கண விரியே.**

*1.* **தந்த தெய்வம் தரும் எனச் சேறல்**
*2.* **முந்துறக் காண்டல்**
*3.* **முயங்கல்**
*4.* **புகழ்தல்**
*5.* **ஆயத்து உய்த்தல்**

என இடந்தலைப்பாட்டின் விரிவு ஐந்தாக அமையும்.

**1. தந்த தெய்வம் தரும் எனச் சேறல்**

முன்னர் இயற்கைப் புணர்ச்சியில் அவளை என்னோடு கூட்டுவித்த தெய்வம் இன்றும் அவ்வாறே செய்யும் என்ற உறுதியுடன் தலைவன் முன்பு தலைப்பெய்த அதே இடத்திற்குத் தலைவியைக் காணச் செல்லுதல்.

**2. முந்துறக் காண்டல்**

தலைவன் முன்பு கண்டு தலைவியைக் கூடிய அதே இடத்தில் காண்பது **முந்துறக் காண்டல்** ஆகும்.

**...இன்றோர் தெய்வ தவப்பெண்**
**உருவாய் ஒருதனியே நின்றதால் என்னுயிர்க்கு உயிரே**

**(தஞ்.கோ.35)**

என் உயிர்க்கு நிகரான தலைவி ஒரு தெய்வப் பெண் போல முன்னே நிற்கின்றாள்.

**பாங்கற் கூட்டத்தின் வகை**

136. **சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை**
**நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்று**
**ஆங்குஎழு வகைத்தே பாங்கற் கூட்டம்.**

**1. சார்தல்**

தலைவியின்பால் கொண்டுள்ள விருப்பத்தின் காரணமாக அவளைச் சேரப் பாங்கனைச் சார்வது.

**2. கேட்டல்**

தலைவனின் இரங்கத்தக்க நிலைகண்டு பாங்கன் அதற்கான காரணத்தைக் கேட்பது.

**3. சாற்றல்**

தலைவியைப் பார்க்க வேண்டும் எனத் தனக்கிருக்கும் ஆவலைத் தலைவன் பாங்கனிடம் கூறுவது.

**4. எதிர்மறை**

தலைவனின் வருத்தத்திற்கான காரணத்தை அறிந்து அதற்கு எதிர்மறையாகப் பாங்கன் கூறுவது.

**5. நேர்தல்**

பாங்கன் தலைவியைக் கண்டு, அவள் கருத்தை அறிந்து வந்து தலைவன் கருத்திற்கு உடன்படுவது.

**6. கூடல்**

தக்க சூழல் அமைந்ததால் தலைவனும் தலைவியும் கூடுவது.

**7. பாங்கிற் கூட்டம்**

தலைவன், தலைவியின் கூட்டத்திற்குப் பிறகு தலைவியைப் பாங்கியர் கூட்டத்தோடு அனுப்பி வைப்பது.

என இந்த ஏழு நிலையில் பாங்கற் கூட்டம் எனப்படும் பாங்கனின் செயற்பாடுகள் அமையும்.

**பாங்கற் கூட்டத்தின்விரி** (20)

137. **தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்**
**தலைவனை உற்றது வினாதலும் தலைவன்**
**உற்றது உரைத்தலும் கற்றறி பாங்கன்**
**கழறலும் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலும்**
**கிழவோன் பழித்தலும் கிழவோன் வேட்கைத்**
**தாங்கற்கு அருமை சாற்றலும் பாங்கன்**
**தன்மனத்து அழுங்கலும் தலைவனோடு அழுங்கலும்**
**எவ்விடத்து எவ்வயிற்று என்றலும் அவனஃது**
**இவ்விடத்து இவ்வயிற்று என்றலும் பாங்கன்**

இறைவனைத் தேற்றலும் குறிவழிச் சேறலும்
இறைவியைக் காண்டலும் இகழ்ந்ததற்கு இரங்கலும்
தலைவனை வியத்தலும் தலைவியை வியத்தலும்
தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறலும்
தலைவன் சேறலும் தலைவியைக் காண்டலும்
கலவியின் மகிழ்தலும் புகழ்தலும் தலைவியைப்
பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலும் என்றீங்கு ஈட்டு நாலாறும்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

1. தலைவன் பாங்கனைச் சார்தல்
2. பாங்கன் தலைவனை உற்றது வினாதல்
3. தலைவன் உற்றது உரைத்தல்
4. பாங்கன் கழறல்
5. கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்
6. கிழவோன் பழித்தல்
7. கிழவோன் வேட்கை தாங்கற்கு அருமை சாற்றல்
8. பாங்கன் தன்மனத்து அழுங்கல்
9. பாங்கன் தலைவனோடு அழுங்கல்
10. எவ்விடத்து எவ்வயிற்று என்றல்
11. இவ்விடத்து இவ்வயிற்று என்றல்
12. பாங்கன் இறைவனைத் தேற்றல்
13. பாங்கன் குறிவழிச்சேறல்
14. பாங்கன் இறைவியைக் காண்டல்
15. இகழ்தற்கு இரங்கல்
16. தலைவனை வியத்தல்
17. தலைவியை வியத்தல்
18. தலைவன் தனக்குத் தலைவி நிலைகூறல்
19. தலைவன் சேறல்
20. தலைவியைக் காண்டல்
21. கலவியில் மகிழ்தல்
22. புகழ்தல்
23. பாங்கியொடு வருக எனப் பகர்தல்
24. பாங்கிற் கூட்டல்

என்னும் இந்த இருபத்து நான்கும் தலைவியைத் தலைவனோடு கூட்டுவிக்கப் பாங்கன் செய்யும் செயற்பாடுகள் ஆகும்.

**1. தலைவன் பாங்கனைச் சார்தல்**

இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு என்னும் இரண்டானும் தலைவியை எய்திக் காதலால் வருந்திய தலைவன் தன் தோழனைச் சென்றடைதல்.

**இனையாது எழுமதி நன்னெஞ்சமே நமக்கு இன்னுயிரே**
**அனையான் அருள் புனலால் அனங்கானலம் ஆற்றுதற்கே**
**(தஞ்.கோ.39)**

**2. பாங்கன் தலைவனை உற்றது வினாதல்**

பாங்கன் தலைவனது வாட்டத்தைக் கண்டு ஐயுற்று அவனுக்கு யாது நேர்ந்தது என்று வினவுதல்.

## பாங்கி மதி உடன்பாட்டின் வகை

138. முன்னுற உணர்தல் குறையுற உணர்த்தல்
இருவரும் உள்வழி அவன்வர உணர்தலென்று
ஒருமூன்று வகைத்தே பாங்கிமதி உடன்பாடு.

பாங்கி மதி உடன்பாடு என்பது தலைவன், தலைவி குறித்ததாகும். இது மூன்று வகையில் அமையும்.

### 1. முன்னுற உணர்தல்

பாங்கியரோடு இருந்த தலைவி, திடீரென்று விலகிப் போய் மீண்டும் வந்து சேர்ந்தபோது தலைவியின் வேறுபாடு கண்டு தலைவன் - தலைவியின் கூட்டத்தைக் குறிப்பால் உணர்வது.

### 2. குறையுற உணர்த்தல்

தலைவன் பாங்கியின் முன் தழையும் கண்ணியும் கொண்டு இரந்து நிற்பதை அறிந்து தலைவியுடன் அவன் கூட்டத்தை உணர்ந்து கொள்ளுதல்.

### 3. இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்

தலைவியும் பாங்கியும் ஒன்றாக இருக்கும்போது தலைவன் அங்குத் தழையும் கண்ணியும் கொண்டு வர, அதனாலும் இருவரின் கூட்டம் என்பதைப் பாங்கி உணர்தல்

(22)

### 1. முன்னுற உணர்தலின் திறம்

பாங்கி மதி உடன்பாட்டில் இது முதலாவதாகும். பாங்கியரைப் பிரிந்து சென்ற தலைவி மாற்றத்தோடு வருவதை அறிந்து தலைவன் - தலைவியின் கூட்டத்தை அறிந்து கொள்ளுதல்.

139. நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பும் செலவும் பயில்வுமென்று
இவ்வகை ஏழினும் ஐயமுற்று ஓர்தலும்
அவ்வகை தன்னால் ஐயம் தீர்தலும்
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் சொல்லின் நாடலுமென
முன்னுற உணர்தல் மூன்றா கும்மே.

#### 1.1 ஐயமுற்று ஓர்தல்

1. **நாற்றம் :** தலைவியின் உடம்பில் வேறு எப்போதும் இல்லாத மணம் வீசுவது.

2. **தோற்றம் :** உடம்பு தோற்றப் பொலிவோடு விளங்குவது.

**3. ஒழுக்கம் :** இறை வழிபாடு இல்லாமல் ஏதோ ஒன்றைப் பற்றி இருப்பது.

**4. உண்டி :** குறைவாக அல்லது அறவே உண்ணாமல் இருப்பது.

**5. செய்வினை மறைத்தல் :** தான் செய்யும் செயல்களைப் பாங்கி முதலாக மற்றவர் அறியாது தலைவி மறைத்தல்.

**6. செலவு :** தோழியரை விட்டு விலகித் தலைவி தனியாக ஓரிடத்திற்குச் செல்லல்

**7. பயில்வு :** ஒரே இடத்தில் நின்று எதையோ நினைத்துக் கொண்டிருத்தல்.

கண்ணில் செவ்வரி படர்தல், நெற்றியில் வியர்வை அரும்புதல், புது மணத்தால் வண்டுகள் ஆர்ப்பரித்தல் போன்ற மாற்றங்களைக்

**கண்ணும் சேயரி பரந்தன்று நுதலும்**
**நுண்வியர் பொறித்து வண்டார்க் கும்மே**
**ஆங்கமை மென்தோள் மடந்தை**
**யாங்கா யினள்கொல் என்னும் என் நெஞ்சு.**

**(தொல்.பொருள்.112 மேற்கோள்)**

என்னும் மேற்கோள் பாடலாலும் அறியலாம்.

2. குறையுற உணர்தலின் திறம்

140. பெட்ட வாயில்பெற்று இரவுவலி உறுத்தோன்
கண்ணியும் தழையும் ஏந்தி நண்ணி
ஊர்பெயர் கெடுதியோடு ஒழிந்தவும் வினாவுழி
யாரே இவர்மனத்து எண்ணம் யாதுஎனத்
தேர்தலும் எண்ணம் தெளிதலும் எனவாங்கு
ஓரிரண்டு ஆகும் குறையுற உணர்தல்.

தலைவன், தனக்கும் தலைவிக்கும் வாயிலாக இருக்கக் கூடிய தலைவியின் தோழியாகிய பாங்கியிடம் தன் குறையைக் கூறி இரந்து நிற்பது குறையுற உணர்தலின் திறம் எனப்படும்.

### 2.1 வெட்ட வாயில் வெற்ற இரவு

கண்ணியும் தழையும் ஏந்திக்குறை இரந்து நிற்கும் தலைவன் ஊர், பெயர், தப்பிவந்த விலங்கு போன்றவற்றை வினவுவான்.

**1. ஊர் வினாதல்**

***புதியேன் மிகவிப் புனத்திற்கி யான் தனிப்போந்தனன் உம்***
***பதியேறு சொல்லும்படி சொல்லுவீர்***

**(தஞ்.கோ.*70*)**

***யான் இப்புனத்திற்குப் புதியவன்; தனியாக வந்துள்ளேன் உம் ஊர் யாது?*** எனத் தோழியிடம் தலைவன் வினவுவான்

**2. வெயர் வினாதல்**

***வரைத்தாழ் சிலம்பின்நும் வாழ்பதி ஈதென்று வஞ்சியன்னீர்***
***உரைத்தால் இழிவது உண்டேல் பெயரேனும் உரைமின்களே***

**(தஞ்.கோ.*71*)**

***மலைகள் சூழ்ந்த பகுதியில் நீயிர் வாழும் ஊரின் பெயரைக் கூறுங்கள்*** எனத் தலைவன் வினவுவான்

## 3. இருவரும் உள்வழி அவன் வர உணர்தலின் திறம்

141. கையுறை ஏந்திவந்த அவ்வகை வினாவுழி
எதிர்மொழி கொடுத்தலும் இறைவனை நகுதலும்
மதியின் அவரவர் மனக்கருத்து உணர்வும் என்று
இருவரும் உள்வழி அவன்வர உணர்தல்
ஒருமூன்று ஆகும் தெரியுங் காலே.

### 3.1 எதிர்மொழி கொடுத்தல்

தலைவியும் தோழியும் ஒன்றாக இருக்கும் இடத்திற்குத் தலைவன் வந்து முன்போலவே ஊர், பெயர், புண்பட்ட யானை போன்றவற்றை வினவி தன் காதலைச் சொல்ல இதுவே நல்ல நேரம் என எண்ணுகிறான்.

தலைவன், அம்புப்பட்ட கலைமான் வந்ததா? என வினவ, தோழி புண்பட்டுக் குருதி ஒழுகக் களிறு வரவில்லை என மாற்றி எதிர்மொழிகிறாள். முன்பு தோழியிடம் வந்தபோது களிறு என்றே தலைவன் குறிப்பிட்டதை நினைவு கூர்கிறாள்.

### 3.2 இறைவனை நகுதல்

தலைவன் அவர்களை விட்டு அகன்ற பின் தோழி தலைவியிடம் தலைவனைப் பற்றிப் பேசி நகைக்கிறாள். இவர் மானைத் தேடி வரவில்லை; தலைவியைத் தேடி வந்து ஏதோதோ பேசுகிறார் என எண்ணிச் சிரிக்கின்றாள்.

# 9. பாங்கியிற் கூட்டம்

பாங்கி தலைவியைத் தலைவனோடு கூட்டி வைக்க இருவரும் கூடுதல் பாங்கியிற் கூட்டம் எனப்படும்.

**பாங்கியிற் கூட்டத்தின் வகை**

143. இரந்து பின்னிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக்கு உடன்படல் மடற்கூற்று ஒழிதல்
குறை நயப்பித்தல் நயத்தல் கூட்டல்
கூடல் ஆயம் கூட்டம் வேட்டலென்று
ஈறாறு வகைத்தே இகுளையிற் கூட்டம்.

1. இரந்து பின்னிற்றல்
2. சேட்படை
3. மடல் கூற்று
4. மடல் விலக்கு
5. உடன்படல்
6. மடற்கூற்று ஒழிதல்
7. குறைநயப்பித்தல்
8. நயத்தல்
9. கூட்டல்
10. கூடல்
11. ஆயம் கூட்டல்
12. வேட்டல்

என்னும் பன்னிரண்டும் பாங்கியிற் கூட்டத்தின் வகைகள் ஆகும்.

***1. இரந்து பின்னிற்றல்:*** தனக்குள்ள குறையைத் தீர்க்க வேண்டுமென்று தலைவன் தோழியைப் புகழ்ந்தும் இரந்தும் பின்னிற்றல்.

***2. சேப்படை:*** பாங்கி தலைவன் கூறியதைக் கேட்டு, அவன் குறையைத் தீர்க்காமல் அவ்விடத்தை விட்டு அகலச் சொல்லுதல்.

***3. மடல் கூற்று :*** தனக்கு உதவி செய்து தலைவியைச் சேர்த்து வைக்காவிட்டால் மடல் ஏறுவேன் எனத் தலைவன் எச்சரித்தல்.

***4. மடல் விலக்கு:*** தலைவன் குறையைப் போக்க உதவி செய்வதாகச் சொல்லிப் பாங்கி மடல் ஏறுதலைத் தவிர்க்கச் சொல்லுதல்.

***5. உடன்படல் :*** பாங்கி தலைவனின் குறையைப் போக்கித் தலைவியைச் சேர்த்து வைக்க உடன்படுதல்.

***6. மடல்கூற்று ஒழிதல் :*** பாங்கி கூறிய உறுதி மொழியைக் கேட்டுத் தலைவன் மடல் ஏறுதலைத் தவிர்ப்பதாகக் கூறுதல்.

***7. குறைநயப்பித்தல் :*** தலைவன் குறையைப் போக்கப் பாங்கி தலைவியை வற்புறுத்தல்.

***8. நயத்தல் :*** பாங்கியின் சொற்கேட்டுத் தலைவனது குறையைப் போக்க உடன்படுதல்.

***9. கூட்டல் :*** தலைவனைச் சந்திக்கக் குறியிட்ட இடத்தில் தலைவியைக் கொண்டு வந்து பாங்கி சேர்த்து வைத்தல்.

***10. கூடல் :*** தலைவனும் தலைவியும் பேருவகையுடன் இரண்டறக் கலந்து இன்பம் துய்த்தல்.

***11. ஆயம் கூட்டல் :*** தலைவனும் தலைவியும் மகிழ்ந்திருந்து பிரிந்த பிறகு பாங்கி அவளைக் கொண்டு போய்ப் பாங்கியர் கூட்டத்தில் சேர்த்தல்.

***12. வேட்டல் :*** தலைவன் தங்களின் கூட்டம் தொடர வேண்டும் என விரும்புதல்; பாங்கியின் வேண்டுகோளின்படி தலைவன் விருந்தை விரும்புதல்.

(27)

பின்வரும் ஆறு நூற்பாக்களும் (144-149) நூற்பா 143 இல் கூறப்பட்டுள்ள பாங்கியிற் கூட்ட வகைகளின் விரியாக அமைந்துள்ளன.